# நல்லூர், யாழ்ப்பாணக் கல்விக்கோட்டம்
## இரண்டாம் தவணைப் பரீட்சை – 2015

| | | |
|---|---|---|
| தரம் : 08 | தமிழ்மொழியும் இலக்கியமும்<br>பெயர் / சுட்டெண் : ........................................................ | நேரம் :<br>2.00 மணித்தியாலம் |

இவ் வினாத்தாளுக்குரிய விடைகளை விடைத்தாளில் எழுதவும்.

### பகுதி - I

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01. "மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது" இங்கு கீர்த்தி என்பதன் ஒத்த கருத்துச் சொல்.
1) அருள் 2) புகழ் 3) இகழ் 4) மகிழ்ச்சி

02. வாழ்க்கை "அன்பின் வழிவந்த கேண்மையாக" விளங்க வேண்டும். இதில் கேண்மை என்பதன் பொருள்.
1) நட்பு 2) ஒற்றுமை 3) அன்பு 4) தியாகம்

03. மரங்கள் அடர்த்தியாக வளர்ந்திருந்தன. அடர்த்தி என்பதன் எதிர்ச்சொல்.
1) செறிவு 2) வலிமை 3) நெருக்கம் 4) ஐது

04. குழந்தை குறுகுறு என்று நடந்தது. இதில் குறுகுறு என்பது.
1) இணைமொழி 2) அடுக்குமொழி 3) இரட்டைக்கிளவி 4) தொடர்மொழி

05. கமுகின் இளையது பிள்ளை போல, பனையின் இளையது.
1) நாற்று 2) கன்று 3) குட்டி 4) வடலி

06. கற்றாளையின் உள்ளீடு சோறு எனப்படுவது போல, முருங்கையின் உள்ளீடு.
1) சோறு 2) சதை 4) சுளை 4) பருப்பு

07. அறிவிற் சிறந்த மேதையும் சில சமயங்களில் பிழை விடுவதுண்டு என்பதற்குப் பொருத்தமான பழமொழி
1) ஆறிலும் சாவு நூறிலும் சாவு
2) ஆனைக்கும் அடி சறுக்கும்
3) அடியாத மாடு படியாது
4) ஆழமறியாமல் காலை விடாதே

08. "அந்தப் புறாக்கள்" எனும் கவிதையை எழுதியவர்.
1) கவிஞர் சுரதா 2) மு. வரதராசன் 3) பாரதிதாசன் 4) ச. பன்னீர்

09. பின்வருவனவற்றுள் இணைமொழியாக அமைவது
1) பாடிப்பாடி 2) பளபள 3) அல்லும் பகலும் 4) வெட்டவெளி

10. கந்தன் "நெத்தி வேர்வை" நிலத்தில் சிந்த உழைத்தான். "நெத்தி வேர்வை என்பதன் சரியான வடிவம்.
1) நெத்தி வியர்வை 2) நெற்றி வியர்வை 3) நெற்றி வேர்வை 4) நெத்தி வெயர்வை

11. அறுபதாவது ஆண்டு முடிவில் எடுக்கப்படும் விழா.
1) வெள்ளிவிழா 2) பொன்விழா 3) பவளவிழா 4) வைரவழா



kalvi.lk

12. software (சொப்ட்வெயார்) என்பதன் தமிழ் வடிவம்.
   1) வன்பொருள் 2) மென்பொருள் 3) நினைவகம் 4) பல்லூடகம்

13. ஓர் எழுவாயும் ஒரு பயனிலையும் கொண்ட வாக்கியம்.
   1) தனிவாக்கியம் 2) கூட்டுவாக்கியம்
   3) கூற்று வாக்கியம் 4) தொடர்வாக்கியம்

14. நீங்கள் எப்போது வருவீர்கள்? நீங்கள் என்பது.
   1) தன்னை 2) முன்னிலை 3) பன்மை 4) படர்க்கை

15. "ஆற்றில் கரைத்த புளி போல" என்ற உவமைத்தொடர் உணர்த்தும் கருத்து.
   1) முடியாத காரியம் 2) பதறிய செயல்
   3) முடிந்த செயல் 4) பயனற்ற செயல்

16. கைம்மலர் கொண்டு இறைவனைத் தொழுவோம். இதில் வந்துள்ள அணி
   1) உருவகம் 2) உவமை 3) சிலேடை 4) எதுகை

17. பின்வருவனவற்றுள் பெயரெச்சமாக அமையாதது.
   1) ஓடி விழுந்தான் 2) பாடிய கமலா 3) குடித்த குழந்தை 4) படித்த மாணவன்

18. கபிலன் அழகான ஓவியங்களை வரைந்தான். இவ்வாக்கியத்தில் செயப்படுபொருள் அடைமொழி.
   1) வரைந்தான் 2) கபிலன் 3) அழகான 4) ஓவியங்களை

19. காலத்தை வெளிப்படையாகக் காட்டும் வினை.
   1) குறிப்பு வினை 2) ஏவல் வினை
   3) வியங்கோள் வினை 4) தெரிநிலை வினை

20. பறவைகள் கூட்டம் வானில்
   1) பறந்தது 2) பறந்தன 3) பறக்கும் 4) பறக்கின்றன

(1½ x 20 = 30 புள்ளிகள்)

## பகுதி - II

**1 ஆம், 2 ஆம், 3 ஆம், 4 ஆம் வினாக்களுக்கும், 5 ஆம், 6 ஆம், 7 ஆம் வினாக்களில் ஏதேனும் ஒன்றையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. தமிழ்ப்பாடத்தில் மேற்கொள்ளப்பட்ட "எண்ணக்கருப் படவாக்க" கணிப்பீடு தொடர்பாக பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

   1. நீர் செய்த கணிப்பீடு எந்த அலகில் மேற்கொள்ளப்பட்டது?
   2. ஆசிரியரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் 3 எழுதுக?
   3. இக்கணிப்பீட்டிற்காக விடயங்களை எவ்வாறு பெற்றுக்கொண்டீர்?
   4. இக்கணிப்பீட்டினை நிறைவேற்றியமையினால் உமக்கு ஏற்பட்ட பயன்கள் எவை?

(4 x 3 = 12 புள்ளிகள்)



kalvi.lk

02. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

அ) சூழல் மாசடைதலும் பாதுகாத்தலும்

ஆ) நான் விரும்பும் பெரியார்

இ) எனக்கு சிறகு முளைத்தால்

ஈ) இன்றைய வாழ்வில் கணனியின் முக்கியத்துவம்

(18 புள்ளிகள்)

03. டெங்கு ஒழிப்பின் அவசியத்தை வலியுறுத்தி உமது நண்பருக்கு 75 சொற்களில் அமையுமாறு கடிதம் எழுதுக.

(12 புள்ளிகள்)

04. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1) பழங்காலத்தில் மக்கள் அரசர்களை எவ்வாறு தேர்ந்தெடுத்தார்கள்?

2) நல்லதோர் நட்பு எத்தகையது என நாலடியார் கூறுகின்றது?

3) தொழிலாளர் விண்ணப்பம் என்ற கவிதையில், தொழிலாளர்கள் செய்த பணிகள் இரண்டு எழுதுக?

4) தங்கத்தோடுகள் கூறும் நிகழ்வு யாது?

5) வேதி உரம் என்றால் என்ன?

6) "களவழி நாற்பது" எனும் நூலைப் பாடிய புலவர் யார்?

(6 x 3 = 18 புள்ளிகள்)

05. பின்வரும் பாடலைப் படித்து விடை எழுதுக.

**"உண்ணக்கனி, ஒதுங்க நிழல்**<br>
**உடலுக்கு மருந்து, உணர்வுக்கு விருந்து**<br>
**அடையக் குடில் அடைக்கக் கதவு**<br>
**அழகு வேலி ஆடத் தூளி**<br>
**தடவத் தைலம் தாளிக்க எண்ணெய்**<br>
**எழுதக் காகிதம் எரிக்க விறகு**<br>
**மரந்தான் மரந்தான்**<br>
**எல்லாம் மரந்தான்**<br>
**மறந்தான் மறந்தான்**<br>
**மனிதன் மறந்தான்!**

(கவிஞர் வைரமுத்து)

1) இக் கவிதைக்கு பொருத்தமான ஒரு தலைப்பு எழுதுக?

2) மரம் தருவனவாக கூறப்படுபவற்றை பட்டியற்படுத்துக?

3) "மனிதன் மறந்தான்" என்பதன் மூலம் கவிஞர் கூற வருவது என்ன?

4) பொருள் தருக.

அ) கனி ஆ) மரம் இ) மருந்து ஈ) அழகு

(10 புள்ளிகள்)



Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

06. பின்வரும் உரைப்பகுதிகளை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

தமிழர் தம் பண்டை வரலாறுகளை அறியச் சாதனமாக இருப்பன அக்காலங்களில் எழுதப்பட்ட இலக்கியங்களே ஆகும். கடைச்சங்க காலம் என்று பேசப்படும் இற்றைக்கு ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் எழுந்த இலக்கியங்களை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்று பாகுபடுத்தினர். அத்துடன் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காவிய இலக்கியங்களும் எழுந்தன. இவற்றை வெறும் எழுத்தோவியம் என்று மட்டும் எண்ணிய காலம் ஒன்றிருந்தது. ஆனால் கனகசபைப்பிள்ளை அவர்கள் வெறும் எழுத்தோவியங்கள் எனக் கொள்ளாது, தமிழர் தம் பண்பாட்டுப் பெருமையை விளக்கும் வரலாற்று ஓவியங்களாகக் கொண்டார். இலக்கியங்களின் உறுதுணை கொண்டு அன்றைய தமிழ் நாட்டு வரலாற்றை முதன்முதல் வெளியிட்ட பெருமை இவருக்கே உண்டு.

1. கடைச்சங்க காலம் எது?
2. கடைச்சங்க காலத்தில் எழுந்த இலக்கியங்கள் எவை?
3. காவிய இலக்கியங்கள் எவை?
4. இப்பகுதியில் இடம் பெறும் உரிச்சொல்லை எழுதுக?
5. கனகசபைப்பிள்ளையின் பெருமைக்குக் காரணம் என்ன?

(5 x 2 =10 புள்ளிகள்)

07. பின்வரும் சொற்களை வைத்து பொருள் விளங்க வாக்கியங்கள் எழுதுக.

1. இடியொலி கேட்ட நாகம் போல
2. மட மட
3. அமளி துமளி
4. மேலே மேலே
5. கன்னங்கரிய

(5 x2 =10 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457